**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் - 2019**

---

## 1. அபிப்பிராயம்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளின் போது நடாத்தி முடிக்கப்பட்டிருந்த 16 பாடநெறிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,962,450 தொகை மற்றும் 2014 – 2016 மற்றும் 2016 – 2018 என்ற காலப் பகுதிகளில் நடாத்தி முடிக்கப்பட்ட 07 பட்ட பாடநெறிகளுக்காக ஆண்டின் போது கிடைத்த ரூபா 3,737,250 தொகையான பாடநெறி வருமானம் நடப்பாண்டில் சீராக்கமாக திரண்ட மிகையில் சீராக்கம் செய்யப்படாமல் வருடாந்த நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 774,800 தொகை அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மிகை கணிப்பீடு செய்யப்பட்ட வருமானம் 2020 இன் கணக்காண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக காண்பிக்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 13 ஆலோசனை டிப்ளோமா பாடநெறிகளுக்காக மாவட்ட அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 8,806,825 தொகையான பாடநெறி வருமானம் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது. இதனால் வருடாந்த வருமானம் அப்பெறுமானத்தால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பாடநெறி வருமானத்தை இனங்காணலில் ஏற்பட்ட வழுக்களின் காரணமாக இந்த கைவிடல் ஏற்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய மொத்த வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 770 | நிறுவனத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுக்கு எந்தவொரு | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் 2019 திசெம்பர் 16 ஆம் திகதி சீதுவ புதிய நிறுவன வளவிற்கு எடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டதன் | பொருட்களை அகற்றும் போது நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு இனங்க நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயன்பாட்டிற்காகவும் வழங்கப்படாதிருந்தமை யை உறுதிப்படுத்த முடியாதாயின் விற்பனை செய்வதற்கோ அல்லது அழிவடையச் செய்வதற்கோ பரிந்துரை செய்யப்பட முடியாது. எனினும், இந்த நிறுவனத்தினால் மொத்த பெறுமதி ரூபா 4,077,000 தொகையான 42 அலுவலக உபகரண விடயங்கள் மற்றும் 22 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் தொடர்பாக பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்படாமல் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | பின்னர் நிறுவனத்தில் விஷேட பொருள் மெய்மெய்யாய்வொன்று 2019 நவம்பர் மாதத்தின் போது நடாத்தப்பட்டிருந்தது. அதன் போது இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத மற்றும் அழிவடையச் செய்ய வேண்டிய பொருட்களை குழுவின் ஊடாக ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் அழிவடையச் செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் விலையினை தீர்மானிக்கும் குழு மூலம் விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு. | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி 2018 யூலை 07 ஆம் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன், 2020 நவம்பர் 30 ஆம் திகதி வரை அதற்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் மூலம் பணிப்பாளர் நாயகப் பதவிக்காக விண்ணப்பம் கோரல் 2019 ஆகஸ்ட் மாதம் பத்திரிகை அறிவித்தல் மூலமும், வர்த்தமானி அறிவித்தல் மூலமும் பகிரங்கப்படுத்தப்பட்டு விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் சகல ஆட்சேர்ப்புக்களும் கைவிடப்பட்டிருந்தமையால் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் இன்னும் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,626,205 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,915,227 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 15,541,432 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிறுவனத்தின் ஏனைய வருமானம் குறைவடைந்தமை மற்றும் ஆளணி வேதனம் மற்றும் நிர்வாக செலவினம் அதிகரித்தமை பாடநெறி செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சமூக சேவைக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட சமூக வேலைகள் தொடர்பாக நான்கு வருட பட்ட பாடநெறிக்காக 2016 ஆம் ஆண்டு முதல் 04 குழுக்களுக்காக 355 மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது மாணவர்களின் வகுப்பு பகிஸ்கரிப்பின் காரணமாக வகுப்பறைகளில் விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பாடநெறிகளில் மாணவர்களின் எண்ணிக்கையும் 282 வரை குறைவடைந்திருந்தது. | மாணவர்கள் தொடர்ச்சியாக 150 நாட்களுக்கு அண்மித்த காலம் மாணவர்களின் சில கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு வகுப்பு பகிஸ்கரிப்பில் ஈடுபட்டிருந்ததுடன், இந்த செயற்பாடுகள் தொடர்பாக மாணவர்களுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. மாணவர்களினால் வகுப்பு பகிஸ்கரிக்கப்பட்ட காலத்தின் போது கைவிடப்பட்ட விரிவுரை வகுப்புக்களை நடாத்தும் காலப்பகுதியின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டு மேவுகை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக நேரலை (Online) மூலமும் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு மாணவர்களின் விரிவுரை பாடவிதானங்களை பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் மேவுகை செய்யப்பட்டிருந்தது. | மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் நிர்வாக நடவடிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும். |

## 3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சமூக சேவைக் கல்லூரியில் சமூக வேலைகள் தொடர்பான 06 கலைமானி பாடநெறிகளை நடாத்துவதற்காக ரூபா 16,798,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், அதில் 04 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 12,334,944 தொகை அதாவது, 73 சதவீதம் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | சமூக சேவைக் கல்லூரியில் சமூக வேலைகள் தொடர்பாக 06 கலைமானி பாட நெறிகளை நடாத்துவதற்கு எதிர்வு கூறப்பட்ட போதிலும், அதில் 04 பாடநெறிகளுக்கு மாத்திரமாக மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கு முடியுமாக இருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சமூக சேவைக் கல்லூரியில் கல்வியினை தொடருகின்ற 140 மாணவர்களுக்கு மாணவர் உதவி பணத்தை வழங்குவதற்காக ரூபா 132,800 தொகையும், 500 மாணவர்களுக்கு தொழல்ரீதியான அபிவிருத்தி கற்கை பயிற்சிகளை வழங்குவதற்காக ரூபா 750,000 தொகையும், சமூக நிகழ்ச்சித் திட்ட பாட நெறிகளை மீளாய்வு செய்வதற்கு ரூபா 5,141,600 தொகையும் மற்றும் பாட நெறிகள் பூர்த்தி செய்த மாணவர்களின் செயல்முன்னேற்றம் தொர்பான பின்தொடர் நடவடிக்கைகளை செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 1,000,000 தொகையான நிதி ஏற்பாடும் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் அந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 7,024,400 தொகையான ஒட்டுமொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | மாணவர்களினால் வகுப்பறை விரிவுரைகளுக்காக உரிய நேரத்தில் வருகைதரலில் பகிஸ்கரிப்பு செய்யப்பட்டமையினால் 140 மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 132,800 தொகையான மாணவர் உதவி பணம் வழங்கப்பட்டிருக்கவில்லை. 500 மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கு உரிய ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பாட நெறிகளுக்கு உள்ளீர்க்கும் பரீட்சையில் சித்தியடைந்த 127 மாணவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும் விடய பாடநெறிகளை மீளாய்வு செய்வதற்காக உள்ளக விரிவுரையாளர்கள் குழாமொன்று ஈடுபடுத்தப்பட்டிருந்தமையினால் அந்த பணம் செலவினம் செய்யப்படாதிருந்ததுடன், மாணவர்கள் வகுப்பு பகிஸ்கரிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையினால் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை செய்யக் கூடிய இயலுமை காணப்படாதிருந்தமையினால் அந்த ரூபா 1,000,000 பணம் செலவிடப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் கிளிநொச்சி, தலாவ, புத்தளம் மற்றும் இரத்தினபுரி போன்ற பிரதேச பயிற்சி நிலையங்கள் மற்றும் கொழும்பு பயிற்சி பிரிவில் 2019/2020 இல் 06 ஆலோசனை டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துவதற்கு ரூபா 4,875,375 தொகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மொத்த நிதி ஏற்பாடும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. போதியளவான மற்றும் முறையான தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் தெளிவுபடுத்தாமையினால் போதியளவான மாணவர்களின் எண்ணிக்கையை சேர்த்துக் கொள்ளமுடியாதிருந்தமை இதற்கான காரணமாக இருந்தது. | 2019/2020 ஆம் ஆண்டிற்காக 06 ஆலோசனை டிப்ளோமா பாடநெறிகளை பயிற்சி பிரிவின் மூலம் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டில் அந்த பயிற்சி பாடநெறிகளுக்கு போதியளவான மாணவர்களின் எண்ணிக்கையொன்று சமூகமளிக்காதிருந்தமையால் நடாத்துவதற்கு முடியாதிருந்தது. | பிரதேச பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படுகின்ற பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளில் 02 உம், விரிவுரையாளர் (I மற்றும் II) பதவிகளில் 07 உம், சிரேஷ்ட பயிற்சி உத்தியோத்தர் பதவி 01 உம், ஆராய்ச்சி உத்தியோகத்தர் I, II பதவிகளில் 04 உம், ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் 03 உம், ஆங்கில விரிவுயைாளர் பதவி 02 உம் ஆக கற்கை நடவடிக்கைகளுக்குரிய 19 பதவிகளின் வெற்றிடங்கள் 2020 நவம்பர் 30 ஆம் திகதியில் காணப்பட்டது. அதன் காரணமாக நிறுவனத்தின் அடிப்படை நோக்கமான பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு இடையூறாக இருந்தது. | இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு 2019 செம்தெம்பர் 12 ஆம் திகதி விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் சகல ஆட்சேர்ப்புக்களும் நிறுத்தப்பட்டதன் காரணமாக ஆட்சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே 2020 மே மாதம் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனையின் பிரகாரம் சகல ஆட்சேர்ப்புக்களும் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு மீண்டும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளை உச்ச அளவில் நடாத்திச் செல்வதற்கு இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாகம் என்பவற்றில் 19 பதவிகளில் 09 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களினால் மொழி பெயர்ப்பாளர் மற்றும் கற்புல செவிப்புல தொழிற்நுட்ப உத்தியோகத்தர்களில் 02 பதவிகள் 10 வருட காலம் வெற்றிடமாக காணப்பட்டது. | நிறுவனத்தின் வெற்றிடமான சகல பதவிகளும் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக நடாத்திச் செல்வதற்காக வெற்றிடங்களுக்கு விரைவாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள வேண்டும். |